# இன்றைய கல்வி முறையும் மறுசீரமைப்பும்

*ம. துர்காதேவி*
உதவிப் பேராசிரியர், வரலாற்றுத்துறை
ஸ்காட் கல்வியியல் கல்லூரி, சேரன்மகாதேவி

மலர்: 10
சிறப்பிதழ்: 1
மாதம்: செப்டம்பர்
வருடம்: 2022
P-ISSN: 2321-788X
E-ISSN: 2582-0397
DOI:
https://doi.org/10.34293/sijash.v10iS1-5210

## முன்னுரை

கல்வி என்பது மனிதனை மாக்களில் இருந்து வேறுபடுத்தி காட்டுவதாகும். மனிதனை மனிதனாக மாற்றம் செய்த சமூகத்தில் வாழ வகுத்துக் கொடுப்பதாகும். குருகுலக் கல்வி தொடங்கி இன்றையக் காலக்கட்டம் வரை கல்வி முறைகளில் பல்வேறு மாற்றங்கள் காலச்சூழுலுக்கேற்ப ஏற்பட்டுள்ளது. அத்தகைய மாற்றங்கள் கலைத்திட்டம் தொடங்கி இன்றைய காலம் வரை பல்வேறு மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது. இக்கட்டுரையானது இன்றைய காலக்கட்டத்திற்கான கல்விமுறையினையும் அவற்றை எவ்வாறு மறுசீரமைக்கலாம் என்பது குறித்தும் ஆராய்வதாக அமைகிறது.

## கல்வி

கல்வி என்பது “ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் இயற்கையாகவே காணப்படும் முழுமையின் வெளிப்பாடே” கல்வி என்று விவேகானந்தர் குறிப்பிட்டுள்ளார்.

ஆதாரக் கல்விக்கு அடித்தளமிட்ட காந்தியடிகள் ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் இயற்கையாகவே காணப்படும் தெய்வீகத்தன்மையை வெளிக்கொணர்வது” கல்வி என்று குறிப்பிட்டுள்ளார்.

## கலைத்திட்டம்

குருகுல கல்வி முறையில் கற்றுக் கொடுக்கப்பட்ட வேங்கள் இன்றைய காலங்கட்டங்களில் கற்றுக் கொடுப்பதில்லை. அன்றைய கலைத்திட்டம் ஆசிரியரை மையமாகக் கொண்டு கட்டமைக்கப்பட்டது. மாணவர்களின் வயது, திறமை, கல்வி கற்கும் வகுப்பு போன்றவற்றை அடிப்படையாக வைத்து அமைக்கப்பட்டுள்ளது. கோத்தாரி கல்வி முறை தொடங்கி இன்றைய புதிய கல்வி கொள்கை வரை கலைத்திட்டம் என்ற பெயரில் மாணவர்களிடம் கற்கும் பழக்கத்தை ஏற்படுத்தும் விதத்தில் அமைக்கப்பட்டதாக தெரியவில்லை.

மனிதனை மாக்கள் நிலையிலிருந்து வேறுபடுத்திக் காட்டுவது கல்வி மட்டுமே. கல்விக் கற்ற ஒருவனால் மட்டுமே சமுதாயத்தில் சிறந்த அங்கத்தினராக செயல்பட முடியும்.

### தமிழ் மொழி

***"காலங்கள் பிறக்கும் முன் தோன்றிய மொழியே
சங்கங்கள் கண்ட சங்க மொழியே
காப்பியங்கள் கண்ட காப்பிய மொழியே
இதிகாசங்கள் கண்ட இன்ப மொழியே
இலக்கணங்கள் கண்ட இடைநில்லா மொழியே"***

தாய்த்தமிழே புகழ்ந்து கொண்டே செல்லலாம். தாய்மொழியை மொழிகளின் காட்சி சாலை என்று அழைக்கிறார் அகத் தியலிங்கம். ஐயாயிரம் ஆண்டுகளைத் தாண்டி இன்றும் என்றும் வற்றாத வளத்தோடு இளமையாக செயல்பட்டு கல்விக்கு பெரும்பங்காற்றி வருவது தமிழ் மொழி மட்டுமே. தமிழ் மொழி செம்மொழி என்றழைக்கப்பட்டாலும் அவை தன்னி கரில்லா உயர்தனிச் செம்மொழியாக மட்டுமே எம்மொழியின் துணையின்றும் செயல்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

### தாய்மொழிக் கல்வி

தமிழ்நாட்டில் பிறந்து, தமிழைக் தாய்மொழியாகப் பேசும் மக்கள் தங்கள் குழந்தைகளுக்கு தாய்மொழியைத் தவறின்றிப் பேசவும், எழுதவும் கற்றுக்கொடுக்க வேண்டியதைக் தங்கள் கடமையாக நினைக்க வேண்டும். தமிழ் பேசுவதைத் தகுதிக் குறைவாக நினைக்கும் மனப் பான்மையை மாற்றவேண்டியது இன்றைய ஆசிரியர், பெற்றோர்கள், கையில் தான் உள்ளது. அறிவு வளர்ச்சிக்காவும் பொருள் ஈட்டவும் பிற மொழிகளைக் கற்றாலும், தாய் மொழியில் பயிற்சியுடையவராக இருத்தல் மிகவும் அவசியம்.

ஜப்பான் போன்ற நாடுகளிலும் கர்நாடகா போன்ற மாநிலங்களிலும் தங்கள் மொழியை வளர்ப்பதிலும், பாதுகாப்பதிலும் அதிகம் கவனம் செலுத்தகின்றனர். இவற்றை விட தொன்மையும், சிறப்பும் வாய்ந்த நம் தமிழ்மொழி சிறப்பை நாம் மறப்பதோ புறக்கணிப்பதோ தாயைப் பழிப்பதற்கு ஒப்பாகும். இந்த ஏற்றத் தாழ்வு களையப்பட வேண்டும். மாணவர்கள் சிலர் தமிழ் தெரியாது என்று கூறுவதை பெருமையான செயலாக நினைக்கின்றனர். அது மிக அவமான செயல் என்பதை மாணவர்களுக்கு உணர்த்த வேண்டும்.

### படைப்பாற்றலை வளர்க்கும் கல்வி

இன்றைய கல்விமுறையில் படைப்பாக்கம் தொடர்பான பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருவது மகிழ்ச்சி அளிக்கக்கூடிய நல்ல நிகழ்வாகும். தனியார் பள்ளிகளில் இத்தகைய பயிற்சிகளுக்கு அதிக முக்கியத்துவம் கொடுப்பதன் வாயிலாகத்தான் அதிக வசூல் செய்யும் பணியும் நடந்தேறுகின்றது. ஆனால் இதில் ஏற்படும் சிக்கல் என்னவென்றால், ஆசிரியர் ஒரு குறிப்பிட்ட பணியை (எ.கா. விதைகளைப் பயன்படுத்தி ஓவியம் வரைதல்) பற்றிய வகுப்பில் செய்முறைகளை விளக்கிவிட்டு வீட்டில் நீங்கள் செய்துகொண்டு வாருங்கள் என்று சொல்லி விடுகின்றனர்.

மாணவர்களும் ஆசிரியர்களிடம் நல்ல பெயரை வாங்க வேண்டும் என்பதற்காக அலைந்து திரிந்து (பொருட்களுக்காக அல்ல. இந்தப் பணியைக் செய்பவருக்காக) பணியை நிறைவு செய்து ஆசிரியரிடம் நல்ல பெயரை பெற்றுவிடுகின்றனர். இந்த முறையினால் மாணவர்களுக்க என்ன பயன் விளைந்துவிடப் போகின்றது. அந்தக் கலையை உண்மையில் மாணவர்கள் தெரிந்து கொள்ள வேண்டும் என்றால், அதற்கான பொருட்களை மாணவர்களை எடுத்துவரச் செய்து அவர்களின் நேர்ப் பார்வையில் செய்யப் பழக்க வேண்டும். தெரியாத

மாணவர்களுக்குச் சற்றுக் கூடுதல் கவனம் செலுத்திப் புரிய வைக்கலாம். கூட்டு முயற்சியாக செய்யும்போது மாணவர்களிடையே மகிழ்ச்சியும், ஆர்வமும் ஏற்படுவதோடு, அவர்களிடையே ஒற்றுமையுணர்வை வளர்க்கக்கூடிய சூழலையும் இதன்மூலம் ஏற்படுத்த இயலும்.

### ஆசிரியர் மாணவர் உறவு

கல்வியைப் போதிக்கும் குருவை தெய்வமாக வழிபட்டவர்கள் நம் முன்னோர்கள். மாதா, பிதா, குரு, தெய்வம் என்ற வரிசைமுறை வழக்கு, பெற்றோர்க்கு அடுத்த நிலையில் நம்மீது அன்பு காட்டுவதிலும், பேணி வளர்ப்பதிலும் பெரும்பங்கு வகிப்பவர்கள் ஆசிரியர்கள் என்பதை எடுத்துக்காட்டுகின்றது. பெற்றோர்க்கு தம் குழந்தைகள்மீது பாசம் வைத்திருப்பதில் வியப்பில்லை. ஏனெனில் அவர்கள் அவர்களின் சொத்து. ஆனால் ஆசிரியர்கள் அப்படி இருப்பதில்லை. தன்னிடம் பயிலும் மாணவச் செல்வங்கள் அனைவரையும் அவர்களின் பிள்ளைகளாகக் கருதுகின்றனர். அவர்களை நல்வழிப்படுத்தி, அறிவுச் செல்வத்தை வழங்கி, இன்றைய வாழ்க்கைச் சூழலை எவ்வாறு எதிர்கொள்ள வேண்டும்? பெற்றோர்க்கு ஆற்ற வேண்டிய கடமைகள், இல்லத்தார்க்கு செய்ய வேண்டுய கடமைகள், சமூகத்திற்கு ஆற்ற வேண்டிய கடமைகள், சமூதாயத்தில் அவனுக்கான இருப்பினை வெளிப்படுத்தலில் அவனுக்கு இருக்கும் பங்களிப்பு போன்றவற்றை உணர்த்துதல் ஆசிரியரின் கடமையாகும்.

மாணவர்களும் தங்களுக்கான இளமைப் பருவத்தின் மதிப்பினைத் தெரிந்து நடந்து கொள்ளவேண்டும். இன்றைய மகிழ்வை மட்டும் மனதில் எண்ணி மனம்போன போக்கில் நடந்து கொள்ளக்கூடாது. ஆசிரியர்களிடம் பணிவுடனும் அன்புடனும் நடந்து கொள்ள வேண்டும். இந்தப் பணிவானது அடிமைத்தனம் இல்லை. வகுப்பறை இணக்கமாக இனிய சூழலோடு இருந்தால் தான் கற்பிப்பவரும், கற்பவரும் நல்ல மனநிலையில் தங்கள் கடமையை செல்வனே செய்ய இயலும். ஆசிரியர் கூறும் பாடங்களை நன்கு கவனித்து வருதல், புரியாத நிலை ஏற்பட்டால் விரலை உயர்த்தி அனுமதிபெற்று தங்கள் ஐயத்தை வெளிப்படுத்துவது என்பது நாகரிகமான செய்கையாகும். அதைவிடுத்து வகுப்பில் ஆசிரியர் இருக்கும்போது மாணவர்கள் பேசிக்கொண்டிருப்பது, சொல்லவரும் கருத்துக்ளைக் கவனியாது, எதிர்மறை விவாதங்களை முன்வைப்பது வகுப்பறை ஆரோக்கியமற்ற சூழலை உருவாக்கிவிடும். இதுபோன்ற நடப்புகள் ஆசிரியர் மாணவரிடையே ஒரு விரிசலையும், வளரத்தொடங்கும் போது அவர்கள் யாரையும் மதிக்காமல், எவர் பேச்சையும் கேட்காமல், தீயவழியில் சென்று சமூகத்தில் அவப்பெயருடன் அவதிப்பட நேருகிறது.

இன்றைய சமுதாயத்தில் கூட்டுக்குடும்ப வாழ்க்கை என்பது சிதைந்துவிட்ட நிலையில் தனிக்குடும்பங்கள் பெருகி விட்டன. பொருளாதாரச் சிக்கல் என்பது மேம்போக்கான காரணம். ஆனால் மனிதனின் மனித சுய நலம் தான் தனிக்குடும்பங்கள் பெருகுவதற்கு உண்மையான காரணமாகும். இதில் பெரிதும் பாதிக்கப்படுவது இன்றையக் குழந்தைகள் தான். இருவரும் வேலைக்குச் செல்லும் வீடுகளில் வளரும் குழந்தைகள் மனதளவில் மிகவும் பாதிக்கப்பட்டவர்களாக மாறி வருவதைப் புள்ளிவிபரப் பட்டியல் தெரிவிக்கின்றது. பேசுவதற்கு ஆளின்றி, விளையாடுவதற்கு நண்பர்களின்றி தொலைக்காட்சிப் பெட்டிகளின் முன்பும், காணொளி விளையாட்டுகளிலும் தங்கள் நேரத்தைச் செலவிடுகின்றனர். இதனால் அவர்கள் உடலளவிலும், உள்ளத்தளவிலும் பாதிக்கப்படுகின்றனர்.

மாறிவிட்ட உணவு முறையாலும், மருந்தற்ற நோய்களாலும் மனிதர்களின் ஆயுள் காலம் குறைந்துகொண்டே வருகின்ற

இன்றையச் சூழ்நிலையில், பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளுக்கு நல்ல ஆரோக்கியமான உணவினையும், கற்பதற்கு ஏற்ற சூழலையும் உருவாக்கித் தரல் வேண்டும். அவர்களிடம் மனம்விட்டுப் பேசுதல், அவர்களின் தேவையான விருப்பங்களை காரணம் கூறி மறுத்தல், முடிந்தவரை அவர்களிடம் மனம்விட்டுப் பேசுதல், அவர்களின் தேவையான விருப்பங்களை நிறைவேற்றுதல், தேவை யற்ற விருப்பங்களை காரணம் கூறி மறுத்தல், முடிந்தவரை அவர்களிடம் கோபம் காட்டாமல் இருத்தல், தங்களின் குடும்பச்சூழலை விளக்கி அதற்கேற்றவாறு குழந்தைகளை வளர்த்தல். முதியோரிடம் அன்பு காட்டச் செய்தல் பெரியவர்களிடம் மாரியாதையாக நடந்துகொள்ளச் செய்தல் ஆசிரியர்களிடம் குழந்தைகளின் நடவடிக் கைகளைப் பற்றி கேட்டுத் தெரிந்து கொள்ளுதல் போன்றவை பெற்றோரின் கேட்டுத் தெரிந்துகொள்ளுதல் போன்றவை பெற்றோரின் கடமையாகும்.

### மறுசீரமைப்பிற்கான வழிமுறைகள்

ஆசிரியர்கள் மேற்கொள்ள வேண்டியவை

1. மாணவர்களிடத்தில் உண்மையான அன்பு செலுத்தி உள்ளம் ஒன்றிய நிலையில் கற்பித்தல் வேண்டும். ஆசிரியப் பணி அறப்பணி என்பதை மனதில் கொள்ள வேண்டும்.
2. மாணவர்களிடையே ஏற்றத்தாழ்வு பார்க்கக்கூடாது.அது மாணவர்களிடையே தாழ்வு மனப்பான்மையையும், பகை யுணர்வையும் ஏற்படுத்தி விடும்.
3. ஆசிரியரின் சொந்த விருப்பு வெறுப்புக்களை மாணவர்களிடத்தில் காட்டக் கூடாது. இது மாணவர் களிடையே தேவையில்லாத விவாதப் பொருளை உண்டு பண்ணிவிடும்.
4. செயல்முறைப் பயிற்சி வகுப்பில் மாணவர்களோடு கலந்து அவர்களை ஊக்குவித்தல் அவர்களைச் சிறப்பாகச் செயல்பட வழிவகுக்கும்.
5. மாணவர்களின் செயல்பாட்டில் ஏதேனும் மாற்றம் கண்டால் உடனடியாகப் பெற்றோர்களுக்குத் தெரியப்படுத்துதல். அவர்களுக்குத் தெரியப்படுத்தாமல் எந்தவொரு முடிவும் தன்னிச்சையாக எடுத்தல் கூடாது. அதனால் தேவையில்லாத விவாதங்களைத் தவிர்க்கலாம்.

### மாணவர்கள் மேற்கொள்ள வேண்டியவை

1. ஆசிரியர்களிடம் அன்புடனும், பணிவுடனும், தோழமையுடனும் பழக வேண்டும். வாழ்க்கையின் அனைத்து நிலைகளிலும் அது கைக்கொடுக்கும்.
2. சொல்லிக் கொடுக்கும் பாடங்கள் புரியவில்லை என்றால் பணிவாகத் தெரியப்படுத்த வேண்டும். அதைத் தெரிந்து கொள்ளுவதில் ஆர்வத்துடன் செயல்பட வேண்டும்.
3. பாடம் நடத்துகையில் தேவையில்லாமல் பேசக் கூடாது, நல்ல நட்பு வட்டத்தை உருவாக்கிக் கொள்ள வேண்டும்.
4. திரைப்படம், தொலைக்காட்சி, கைபேசி (இணையத் தொடர்புள்ள) போன்ற ஊடகங்களின் ஈர்ப்பிலிருந்து விடுபடல் வேண்டும்.
5. காலத்தின் அருமையை உணர்ந்து செயல்பட வேண்டும். அன்றைய பாடங்களை, பயிற்சிகளை உரிய நேரத்தில் படித்து முடிக்கப் பழகுதல் வேண்டும்.

### பெற்றோர்கள் மேற்கொள்ள வேண்டியவை

1. பிள்ளைகளின் உடல் ஆரோக்கியத் திற்கும், உள்ள ஆரோக்கியத்திற்கும் ஏற்ற சூழலை உருவாக்கித் தருவதில் பெற்றோர்களின் பங்களிப்பு மிகவும் முக்கியமானது.
2. பிள்ளைகளைக் கண்டிப்புடனும், கனிவுடனும், கடமையை உணரச்செய்து வளர்த்தெடுப்பதில் பெற்றோர்க்கு பங்கு அதிகம்.

3. அவர்களின் செயல்பாடுகளைக் கூர்ந்து கவனித்தால் கல்வியில் அவர்கள் காட்டு கின்ற ஈடுபாட்டின் அவ்வப்போது சரிபார்த்தல், முடிந்தவரை அவர்களோடு பொழுதைக் கழித்தல் குழந்தைகள் சிறப்பாக படித்து வளருவதற்கான சூழலை ஏற்படுத்தும்.
4. ஒரிரு மதிப்பெண்கள் குறைந்து விட்டால் பிள்ளைகளைத் தண்டிப்பது மிகப்பெரிய தவறு என்பதை பெற்றோர்கள் உணரவேண்டும். அவர்கள் பந்தயக் குதிரைகள் அல்ல. முதலில் வருவதற்குத் தூண்டக்கூடாது. அது அவர்களிடையே மனச்சோர்வை ஏற்படுத்தி விடும்.
5. மாணவர்களின் தனித்திறன்களுக்கு மதிப்பளித்து வாய்ப்பு கிடைத்தால் அதற்கான பயிற்சி வகுப்புகளுக்கு ஏற்பாடு செய்தல் வேண்டும்.

**முடிவுரை**

கல்வி என்பது சந்தையில் கிடைக்கும் காய்கறி அல்ல என்பதை ஒவ்வொரு குடிமகனும் கண்டிப்பாக உணர்தல் அவசியமான ஒன்றாகும். சமுதாயம் என்பது அனைவரும் ஒன்று சேர்ந்து வாழும் அமைப்பாகும். அவ்வமைப்பானது சி றப்பாக செயல்பட கல்வி என்னும் விளக்கு கட்டாயமான ஒன்றாகும். அவ்விளக்கினை சமூகத்திடம் கொண்டு சேர்ப்பது ஒவ்வொரு ஆசிரியரின் கடையாகும். ஆசிரியர் தரமான கல்வியை கொடுப்பதற்கு வித்தாக இருப்பது சரியான கலைத் திட்டம் ஆகும். கலைத்திட்டம் என்பமு மாணவர்களின் மனம், உடல், ஆன்மீகம் மற்றும் ஒழுக்கத்தை மேம்படுத்தும் ஒன்றாக இனிவரும் காலங்களிலாவது உருவாக வேண்டும் என்பதே இக்கட்டுரையின் அச்சாணியாகும்.